## பதவி வெற்றிடங்கள்

- காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது, 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (ஸ்தாபித்தல், நிர்வகித்தல் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஓர் அலுவலமாகும்.

- காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தில் காணப்படும் பின்வரும் வெற்றிடங்களுக்காக பொருத்தமான தகுதியுள்ள ஆட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிதி மற்றும் வழங்கல் பிரிவுத் தலைவர் - பதவி 01**
**HM 1-1**

**பதவியின் விபரம்:** நிதி மற்றும் வழங்கல் பிரிவின் கடமைகள் மற்றும் பொறுப்புகளைக் கவனித்தல், அத்துடன் அவை தொடர்பான நிதி மற்றும் வழங்கல் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் முறைமைகளை உருவாக்குதல் மற்றும் சகல நிதி மற்றும் வழங்கல் சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**தகைமைகள்:** (பின்வரும் 1 அல்லது 2)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி/ கணக்கியல்/ வணிக நிர்வாகம்/ வர்த்தகம்/ முகாமைத்துவம் (நிதி) ஆகிய துறைகளில் ஒன்றில் பட்டம் அல்லது தொடர்புடைய துறையில் பட்டப்பின்பட்ட தகைமையொன்றுடன் (முதுமாணி) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியின் விடயப் பகுதிக்கு ஏற்புடைய வேறு ஏதேனும் பட்டம் அல்லது இப்பதவியின் விடயப் பகுதியுடன் தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனமொன்றின் இணைந்த அங்கத்துவத்துடன் கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/ நிறுவனம் அல்லது ஒரு புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' குறைந்தபட்சம் 13 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

   **அல்லது**

2. இப்பதவியுடன் தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனமொன்றின் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருப்பதுடன், கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/ நிறுவனம் அல்லது ஒரு புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' குறைந்தபட்சம் 13 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 35 வருடங்களுக்கு குறையாதவராகவும் 55 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** ரூபா 140,640 - 15 x 4,100 - 202,140/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/ 2025 இற்கமைய).

வாகனக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் ஏனைய நிறுவனக் கொடுப்பனவுகளுக்கும் உரித்துடையவர்.

**சட்ட, கொள்கை மற்றும் ஆராய்ச்சி பிரிவுத் தலைவர் - பதவி 01**
**HM 1-1**

**பதவியின் விபரம்:** சட்ட, கொள்கை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் கடமைகள் மற்றும் பொறுப்புகளைக் கவனித்தல் நிறுவனத்தின் உள்வாரி மற்றும் வெளிவாரிச் செயற்பாடுகளுக்கான சட்ட ரீதியான கடப்பாடுகளைக் கையாள்வதற்குத் துணைபுரிதல் சட்ட ரீதியான சவால்களுக்குத் தீர்வுகாணல் மற்றும் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் சட்ட, கொள்கை மற்றும் ஆராய்ச்சி ரீதியான தலையீடுகளை மேற்கொள்வதற்கான பரப்புரை உத்தியொன்றை வகுத்தல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தில் ஒரு பட்டம் அல்லது சட்டத்தரணித் தகைமையுடன், சட்டத்தில் பட்டப்பின் பட்ட (முதுமாணி) தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன், கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' குறைந்தபட்சம் 12 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 35 வருடங்களுக்கு குறையாதவராகவும் 55 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரப் பதவிகளில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு அதிகபட்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**சம்பள அளவுத்திட்டம்:** ரூபா 140,640 - 15 x 4,100 - 202,140/-
(முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

வாகனக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் ஏனைய பொருத்தமான நிறுவனக் கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்.

**பாதிக்கப்பட்டவர் மற்றும் குடும்ப ஆதரவு வழங்கும் பிரிவின் தலைவர் - பதவி 01**
**HM 1-1**

**பதவியின் விபரம்:** பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பங்களுக்கான ஆதரவு வழங்கும் பிரிவின் கடமைகள் மற்றும் பொறுப்புகளைக் கவனித்தல் அது தொடர்பான மூலோபாய நடைமுறைகளைத் தயாரித்தல் மற்றும் நிபுணர்களுக்கான பரிந்துரை முறைமையை உருவாக்கி மேம்படுத்துதல் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உளச்சமூக ஆதரவு மற்றும் சமூக சேவை நடவடிக்கைகளுக்கான மூலோபாயத் திட்டமிடல் மற்றும் மீளாய்வுப் பணிகளுக்குத் தலைமை தாங்குதல் மற்றும் அவற்றைச் செயற்படுத்துதல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உளவியல்/ ஆலோசனை மற்றும் உளவியல்/ தத்துவம் மற்றும் உளவியல்/ சமூகவியல்/ சமாதானம் மற்றும் முரண்பாட்டுத் தீர்வு ஆகியவற்றில் ஒன்றில் பட்டமொன்றுடன், தொடர்புடைய துறையில் முதுமாணித் தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன், கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/ நிறுவனம் அல்லது

புகழ்பெற்ற தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' குறைந்தபட்சம் 12 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 35 வருடங்களுக்கு குறையாதவராகவும் 55 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரப் பதவிகளில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு அதிகபட்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**சம்பள அளவுத்திட்டம்:** ரூபா 140,640 - 15 x 4,100 - 202,140/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

வாகனக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் ஏனைய பொருத்தமான நிறுவனக் கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்.

**தொடர்பாடல் மற்றும் வெளிக்களச் செயற்பாட்டுப் தலைவர் - (பதவி 01)**
**HM 1-1**

**பதவியின் விபரம்:** தொடர்பாடல் மற்றும் வெளிக்களச் செயற்பாட்டுப் பிரிவின் கடமைகள் மற்றும் பொறுப்புகளைக் கவனித்தல் அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம் மற்றும் சமூக ஊடகங்கள் உள்ளடங்கலாக பல்வேறு தளங்களினூடாக தொடர்பாடல் மூலோபாயங்களைத் தயாரித்து மேம்படுத்துதல் அத்துடன் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் திட்ட வெளிக்களச் செயற்பாடுகள் மற்றும் தொடர்பாடல் சார்ந்த அனைத்து விடயங்களுக்கும் தலைமை தாங்குதல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெகுஜனத் தொடர்பாடல் அல்லது வெகுஜன ஊடகம் ஆகிய துறைகளில் ஒன்றில் பட்டமொன்றுடன் தொடர்புடைய துறையில் பட்டப்பின் பட்ட முதுமாணித் தகைமையொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன், கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/ நிறுவனம் அல்லது ஒரு புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' குறைந்தபட்சம் 12 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 35 வருடங்களுக்கு குறையாதவராகவும் 55 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரப் பதவிகளில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு அதிகபட்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**சம்பள அளவுத்திட்டம்:** ரூபா 140,640 - 15 x 4,100 - 202,140/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

வாகனக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் ஏனைய பொருத்தமான நிறுவனக் கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்.

**பாதுகாப்புப் பிரிவுத் தலைவர் - (பதவி 01)**
**HM 1-1**

**பதவியின் விபரம்:** காணாமல் போன ஆட்கள் பற்றிய பிராந்திய அலுவலகங்களின் பாதுகாப்புப் பிரிவுகளை மேற்பார்வைசெய்யும் கடமைகளையும் பொறுப்புகளையும்

கவனித்தல் சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டோருக்கான உத்தியோகபூர்வ பாதுகாப்பு செயன்முறைகள் மற்றும் நடைமுறைகள் உள்ளடங்கலாக, பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்பிற்கான மூலோபாயங்களை உருவாக்குதல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம்/ சமாதானம் மற்றும் முரண்பாட்டுத் தீர்வு/ அரசறிவியல்/ சமூகவியல் ஆகியவற்றில் ஒன்றில் பட்டமொன்றுடன் தொடர்புடைய துறை அல்லது மனித உரிமைகள் துறையில் பட்டப்பின் பட்ட முதுமாணித் தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன், கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/ நிறுவனம் அல்லது ஒரு புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' குறைந்தபட்சம் 12 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 35 வருடங்களுக்கு குறையாதவராகவும் 55 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரப் பதவிகளில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு அதிகபட்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**சம்பள அளவுத்திட்டம்:** ரூபா 140,640 - 15 x 4,100 - 202,140/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

வாகனக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் ஏனைய பொருத்தமான நிறுவனக் கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்.

**நிதி மற்றும் வழங்கல் பிரதி/ உதவித் தலைவர் - (பதவி 01)**
**MM 1-1**

**பதவியின் விபரம்:** காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் நிதி மற்றும் நிர்வாகத் தலைவரினால் ஒதுக்கப்படும் பணிகளைப் பொறுப்பேற்றுச் செயற்படுத்தல் அத்துடன் அலுவலகத்தின் முறைமைகள், அனைத்து நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கொள்வனவுச் செயற்பாடுகளைப் பராமரிப்பதற்கும் வினைத்திறனாக நிர்வகிப்பதற்கும் பொறுப்பாதல்.

**தகைமைகள்:** (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல்/ நிதி/ வர்த்தகம் ஆகியவற்றில் ஒன்றில் பட்டத்தைப் பெற்றிருத்தல். அத்துடன், முதலாம் பட்டத்தைப் பெற்றதன் பின்னர் இப்பதவிக்கு ஏற்புடைய துறையில் குறைந்தபட்சம் ஓராண்டு (01) தகைமைக்கு பின்னரான அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

2. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனமொன்றின் (CIMA/ACCA/ICA) இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது CMA தகைமையை முழுமையாகப் பூர்த்தி செய்திருத்தல். அத்துடன், இப்பதவிக்குத் ஏற்புடைய துறையில் குறைந்தபட்சம் ஓராண்டு (01) தகைமைக்கு பின்னரான அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

3. கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா தகைமையை பெற்றிருப்பதுடன் இப்பதவிக்கு ஏற்புடைய துறையில் குறைந்தபட்சம் ஓராண்டு (01) தகைமைக்கு பின்னரான அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** ரூபா 91,690 - 10 x 2,480 - 15 x 3,450 - 168,240/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

**நிர்வாகப் பிரதி/ உதவித் தலைவர் - (பதவி 01)**
**MM 1-1**

**பதவியின் விபரம்:** நிர்வாகக் குழுவின் ஓர் அங்கமாகச் செயற்படல் மனித வளங்கள் மற்றும் நிர்வாகம் தொடர்பான அனைத்து விடயங்களிலும் பணிகளை ஒருங்கிணைத்தல் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர், மனித வள மற்றும் நிர்வாகத் தலைவர் ஆகியோருடன் தொடர்பாடல்களைப் பேணுதல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம்/ நிர்வாகம்/ மனித வள முகாமைத்துவம்/ பொது முகாமைத்துவம் ஆகியவற்றில் ஒன்றில் பட்டமொன்றுடன் முதலாம் பட்டத்தைப் பெற்றதன் பின்னர் இப்பதவிக்கு ஏற்புடைய துறையில் குறைந்தது ஓராண்டு (01) தகைமைக்கு பின்னரான அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** ரூபா 91,690 - 10 x 2,480 - 15 x 3,450 - 168,240/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

**பிராந்திய ஒருங்கிணைப்பாளர் (பிரதான) - (பதவிகள் 02)**
**MM 1-1**

**பதவியின் விபரம்:** பிராந்திய அலுவலகத்தின் கடமைகள் மற்றும் பொறுப்புகளைக் கவனித்தல் இதில் பிராந்திய அலுவலகத்தின் சுமுகமான மற்றும் வினைத்திறனான செயல்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் கண்காணித்தல் அத்துடன் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகம்/ அலுவலகங்களுடன் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் என்பன உள்ளடங்கும்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம்/ மனித உரிமைகள்/ முகாமைத்துவம்/ நிர்வாகம்/ மனித வள முகாமைத்துவம்/ பொது முகாமைத்துவம் ஆகியவற்றில் பட்டமொன்றுடன் முதலாம் பட்டத்தைப் பெற்றதன் பின்னர் இப்பதவிக்கு ஏற்புடைய துறையில் குறைந்தபட்சம் ஓராண்டு (01) தகைமைக்கு பின்னரான அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** ரூபா 91,690 - 10 x 2,480 - 15 x 3,450 - 168,240/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

**நிர்வாக அலுவலர் - (பதவி 01)**
**JM 1-1**

**பதவியின் விபரம்:** மனித வள மற்றும் நிர்வாகப் பிரிவின் பணிகளை முன்னெடுப்பதற்கான கடமைகள் மற்றும் பொறுப்புகளைக் கவனித்தல் அனைத்து நிர்வாகப் பணிகளையும் நிர்வாகப் பிரதித் தலைவர் மற்றும் நிர்வாக உதவித் தலைவர் ஆகியோருடன் இணைந்து ஒருங்கிணைத்தல் மற்றும் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ஏனைய திணைக்களங்கள் மற்றும் பிரிவுகளுடன் நிர்வாகம் சார்ந்த விடயங்கள் தொடர்பான தொடர்பாடல்களுக்குப் பொறுப்பாக இருத்தல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம்/ நிர்வாகம்/ மனித வள முகாமைத்துவம்/ பொது முகாமைத்துவம் ஆகியவற்றில் ஒன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** ரூபா 72,650 - 10 x 1,360 - 18 x 2,040 - 122,970/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

**தகவல் தொழில்நுட்ப அலுவலர் - (பதவிகள் 02)**
**JM 1-1**

**பதவியின் விபரம்:** காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தொடர்புடைய பிரிவின் பணிகளுடன் தொடர்புடைய கடமைகள் மற்றும் பொறுப்புகளைக் கவனித்தல்.

**தகைமைகள்:** (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3 அல்லது 4)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி அறிவியலில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

   **அல்லது**

2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப அல்லது தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை மட்டம் 7 இற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

   **அல்லது**

3. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப அல்லது தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை மட்டம் 6 இற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழொன்றுடன் கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனமொன்றில் ஏற்புடைய துறையில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட தகைமைக்கு பின்னரான அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

   **அல்லது**

4. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப அல்லது தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை மட்டம் 5 இற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழொன்றுடன் கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனமொன்றில் ஏற்புடைய துறையில் குறைந்தபட்சம் பத்து (10) வருட தகைமைக்கு பின்னரான அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** ரூபா 72,650 - 10 x 1,360 - 18 x 2,040 - 122,970/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

**பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்ப ஆதரவு அலுவலர் - (பதவிகள் 08)**
**JM 1-1**

**பதவியின் விபரம்:** காணாமல் போனோர் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு, காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினால் வழங்கப்படும் அனைத்து ஆதரவுகள் மற்றும் சேவைகளிலும் ‘‘பாதிக்கப்பட்டோரை மையப்படுத்திய அணுகுமுறைகளை’’ உறுதிப்படுத்துதல் அத்துடன் பாலின உணர்திறன் மிக்க சூழலைப் பலப்படுத்துதல் மற்றும் பராமரித்தல் உள்ளிட்ட பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்ப நலன்புரிப் பிரிவின் பணிகளை முன்னெடுப்பதற்கான கடமைகள் மற்றும் பொறுப்புகளைக் கவனித்தல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள்/ உளவியல்/ உளவள ஆலோசனை மற்றும் உளவியல்/ சமூகவியல் ஆகியவற்றில் ஒன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** ரூபா 72,650 - 10 x 1,360 - 18 x 2,040 - 122,970/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

**மொழிபெயர்ப்பாளர் - (பதவிகள் 03)**
**MA 4**

**பதவியின் விபரம்:** ஏதாவது ஒரு மொழியிலுள்ள விடயங்களை வாசித்தல் அல்லது செவிமடுத்தல், அவ்விடயங்களின் பொருள் மற்றும் சூழலைப் புரிந்து கொள்வதை உறுதிப்படுத்தல், பின்னர் மூல மொழியின் பொருள் மாறாத வகையில் அதனை இரண்டாவது மொழிக்கு மாற்றுதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய கடமைகள் மற்றும் பொறுப்புகளைக் கவனித்தல்.

**தகைமைகள்:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பு கற்கைகள் அல்லது மொழிகளில் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** ரூபா 64,320 - 10 x 1,360 - 15 x 1,670 - 5 x 2,040 - 113,170/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

**தரவு உள்ளீட்டு தொழிற்படுத்துநர் - (பதவிகள் 06)**
**MA 1-1**

**பதவியின் விபரம்:** காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தரவு முகாமைத்துவப் பிரிவின் பணிகளுடன் தொடர்புடைய கடமைகள் மற்றும் பொறுப்புகளைக் கவனித்தல்.

**தகைமைகள்:**

அ) க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஒரே அமர்வில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியைப் பெற்று ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்:

i. சிங்களம்/ தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. கணிதம்

ஆ) க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் (பொதுச் சாதாரண வினாத்தாள் நீங்கலாக) மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இ) கணினிப் பயிற்சி அல்லது தரவு உள்ளீடு தொடர்பான சான்றிதழ் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

**வயதெல்லை:** 18 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** ரூபா 46,220 - 10 x 540 - 7 x 630 - 4 x 890 - 20 x 1,190 - 83,390/-

(முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

**முகாமைத்துவ உதவியாளர் - (பதவிகள் 13)**
**MA 1-1**

**பதவியின் விபரம்:** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலின் கீழ் பணிகளை/ நடவடிக்கைகளை முன்னெடுத்தல் அத்துடன் நிறுவனத்தின் முகாமைத்துவ, நிர்வாக மற்றும் நிறைவேற்று தர உத்தியோகத்தர்களின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு வசதியளித்தல், ஆதரவு வழங்குதல் மற்றும் துணைபுரிதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய கடமைகள் மற்றும் பொறுப்புகளைக் கவனித்தல்.

**தகைமைகள் :**

அ) க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஒரே அமர்வில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியைப் பெற்று ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

i. சிங்களம்/ தமிழ்

ii. ஆங்கில மொழி

iii. கணிதம்

ஆ) க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் (பொதுச் சாதாரண வினாத்தாள் நீங்கலாக) மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 18 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** ரூபா 46,220 - 10 x 540 - 7 x 630 - 4 x 890 - 20 x 1,190 - 83,390/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

**சாரதி - (பதவிகள் 02)**

**PL 3**

**பதவியின் விபரம்:** வாகனத்தைப் பராமரித்தல், ஓட்டப் பதிவேட்டை இற்றைப்படுத்துதல் மற்றும் நிறுவனத்தின் நிர்வாக மற்றும் நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்களின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலின் கீழ் பணிகளை முன்னெடுத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய கடமைகள் மற்றும் பொறுப்புகளைக் கவனித்தல்.

**தகைமைகள்:** க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் குறைந்தது இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன், மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பார ஊர்திகளை ஓட்டுவதற்கான செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றதன் பின்னர் குறைந்தது மூன்று (03) வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 22 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்:** ரூபா 43,280 - 10 x 490 - 10 x 540 - 10 x 590 - 12 x 630 - 67,040/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

**அலுவலக உதவியாளர் - (பதவிகள் 04)**

**PL1**

**பதவியின் விபரம்:** பிரிவின் பணிகளுக்கு உதவி செய்தல் பிரிவின் தலைவரால் ஒதுக்கப்படும் பணிகளைப் பொறுப்பேற்றல் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலின் கீழ் செயற்படல் நிறுவனத்தின் முகாமைத்துவ, நிர்வாக மற்றும் நிறைவேற்று தர உத்தியோகத்தர்களின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு வசதியளித்தல், ஆதரவு வழங்குதல் மற்றும் துணைபுரிதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய கடமைகள் மற்றும் பொறுப்புகளைக் கவனித்தல்.

**தகைமைகள்:** க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் குறைந்தது இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:** 18 வருடங்களுக்கு குறையாதவராகவும் 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:** ரூபா 40,500 - 10 x 450 - 10 x 490 - 7 x 540 - 15 x 590 - 62,530/- (முகாமைத்துவச் சேவைச் சுற்றுநிருபம் 01/2025 இற்கமைய).

**மேற்படி அனைத்துப் பதவிகளுக்குமான பொதுவான நிபந்தனைகள்:**

- ஒவ்வொரு விண்ணப்பதாரியும்
  - ✓ இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
  - ✓ பதவிக்குரிய கடமைகளைச் நிறைவேற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
  - ✓ தீவின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
  - ✓ சிறந்த நற்பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- கணினி அறிவு மற்றும் நிலைமாறுகால நீதி பற்றிய அறிவு கூடுதல் நன்மையாக இருக்கும்.
- எம்மால் வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தையே பூரணப்படுத்த வேண்டும்.
- தேவையான தகவல்கள் இன்றி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- ஏற்கனவே அரச அல்லது அரை அரச துறையில் பணியாற்றுபவர்கள், தமது விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பம் அடங்கிய உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள், ஒவ்வொரு பதவிக்குமாக தனித்தனியான விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரிகள் அனைவரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- தகுதியான விண்ணப்பதாரிகள், பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை, சபையினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சை மற்றும்/ அல்லது கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.
- இப்பதவிகள் நிரந்தரமானவை என்பதுடன் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றில் பங்களிப்புச் செய்யப்படும்.
- ஆட்சேர்ப்பு தொடர்பான இறுதி முடிவுகள் OMP சபையிடம் மட்டுமே இருக்கும். ஆட்சேர்ப்பு செயல்முறை தொடர்பான எந்தவொரு முடிவையும் எடுக்கும் உரிமையை அது கொண்டுள்ளது.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் **2026 சனவரி 25ஆம் திகதி** அன்று அல்லது அதற்கு முன்னதாக **தவிசாளர், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம், இல. 40, 3வது மாடி, புத்கமுவ வீதி, ராஜகிரிய** எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**தலைவர்**
**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்**